## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 8-9 - கருமாணிக்கம்
### (ஆழ்வார் தமது அநந்யார்ஹஶேஷத்வத்தை, தோழி மணவிலக்குக்காகத் தாய்மாரோடு கூறும் பாசுரத்தாலே அருளிச் செய்தல்)

3535 * கருமாணிக்க மலை மேல் * மணித்தடம்
தாமரைக் காடுகள் போல் *
திருமார்வு வாய் கண் கை * உந்தி காலுடை
ஆடைகள் செய்ய பிரான் **
திருமால் எம்மான் செழுநீர் வயல் *
குட்டநாட்டுத் திருப்புலியூர் *
அருமாயன் பேரன்றிப் பேச்சிலள் *
அன்னைமீர் இதற்கு என் செய்கேனோ? 1

3536 அன்னைமீர் இதற்கு என் செய்கேன்? *
அணிமேருவின் மீதுலவும் *
துன்னுசூழ் சுடர் ஞாயிறும் *
அன்றியும் பல்சுடர்களும் போல் **
மின்னு நீள்முடியாரம் * பல்கலன்
தானுடை எம்பெருமான் *
புன்னை அம்பொழில் சூழ் *
திருப்புலியூர் புகழும் இவளே 2

3537 புகழும் இவள் நின்று இராப்பகல் *
பொருநீர்க்கடல் தீப்பட்டு * எங்கும்
திகழும் எரியொடு செல்வதொப்பச் *
செழுங்கதிர் ஆழி முதல் **
புகழும் பொருபடை ஏந்திப் * போர்
புக்கு அசுரரைப் பொன்றுவித்தான் *
திகழுமணி நெடுமாட நீடு *
திருப்புலியூர் வளமே 3

3538 ஊர்வளம் கிளர் சோலையும் *
கரும்பும் பெருஞ்செந்நெலும் சூழ்ந்து *
ஏர்வளம் கிளர் தண்பணைக் *
குட்டநாட்டுத் திருப்புலியூர் **
சீர்வளம் கிளர் மூவுலகுண்டுமிழ் *
தேவபிரான் *
பேர்வளம் கிளர்ந்தன்றிப் பேச்சிலள் *
இன்று இப்புனையிழையே 4

3539 புனையிழைகள் அணிவும் *

ஆடை உடையும் புதுக்கணிப்பும் *
நினையும் நீர்மை அதன்று * இவட்கிது
நின்று நினைக்கப் புக்கால் **
சுனையினுள் தடந்தாமரை
மலரும் * தண்திருப்புலியூர் *
முனைவன் மூவுலகாளி * அப்பன்
திருவருள் மூழ்கினளே 5

3540 திருவருள் மூழ்கி வைகலும் *
செழுநீர் நிறக் கண்ணபிரான் *
திருவருள்களும் சேர்ந்தமைக்கு *
அடையாளம் திருந்தவுள **
திருவருள் அருளால் * அவன் சென்று
சேர் தண்திருப்புலியூர் *
திருவருள் கமுகு ஒண்பழத்தது *
மெல்லியல் செவ்விதழே 6

3541 மெல்லிலைச் செல்வ வண்கொடிப் புல்க *
வீங்கிளந்தாள் கமுகின் *
மல்லிலை மடல் வாழை * ஈன்கனி
சூழ்ந்து மணம் கமழந்து **
புல்லிலைத் தெங்கினூடு * காலுலவும்
தண்திருப்புலியூர் *
மல்லலம் செல்வக் கண்ணன் தாள்
அடைந்தாள் * இம்மடவரலே 7

3542 மடவரல் அன்னைமீர்கட்கு * என் சொல்லிச்
சொல்லுகேன்? மல்லைச் செல்வ *
வடமொழி மறை வாணர் * வேள்வியுள்
நெய்யழல் வான்புகை போய் **
திடவிசும்பில் அமரர் நாட்டை
மறைக்கும் * தண்திருப்புலியூர் *
பட அரவணையான் தன் நாமம்
அல்லால் * பரவாள் இவளே 8

3543 பரவாள் இவள் நின்று இராப்பகல் *
பனிநீர் நிறக் கண்ணபிரான் *
விரவார்[1] இசை மறை வேதியர் ஒலி *
வேலையின் நின்றொலிப்ப **
கரவார் தடந்தொறும் தாமரைக்
கயம் * தீவிகை நின்றலரும் *

---

[1] விரைவார்

புரவார் கழனிகள் சூழ் *
திருப்புலியூர்ப் புகழன்றி மற்றே 9

3544 அன்றி மற்றோரு உபாயம் என்? * இவள்
அந்தண்துழாய் கமழ்தல் *
குன்றமா மணிமாட மாளிகைக் *
கோலக்குழாங்கள் மல்கி **
தென்திசைத் திலதம்புரை *
குட்டநாட்டுத் திருப்புலியூர் *
நின்ற மாயப்பிரான் திருவருளாம் *
இவள் நேர்ப்பட்டதே 10

3545 * நேர்ப்பட்ட நிறை மூவுலகுக்கும் *
நாயகன் தன்னடிமை *
நேர்ப்பட்ட தொண்டர் தொண்டர்
தொண்டர் * தொண்டன் சடகோபன் சொல் **
நேர்ப்பட்ட தமிழ் மாலை * ஆயிரத்துள்
இவை[2] பத்தும்
நேர்ப்பட்டார் அவர் * நேர்ப்பட்டார் *
நெடுமாற்கு அடிமை செய்யவே 11

**அடிவரவு:** கருமாணிக்க அன்னைமீர் புகழும் ஊர் புனை திரு
மெல்லிலை மடவரல் பரவாள் அன்றி நேர் நெடுமால்

[2] இவையுமோர்